# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.14/2023 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகேசன் | த-பெ | அழகர்சாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 52/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.07.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்படவில்லை**

----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 18.12.2022 அன்று மதியம் 2.45 மணியளவில் இருசக்கர வாகனத்தில் கழனிவாசலில் இருந்து அரசு மருத்துவமனைக்கு நான் சென்று கொண்டிருந்தேன். நான் சென்று கொண்டிருந்தபோதே இருசக்கர வாகனத்தில் சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் இரண்டு நபர்கள் ஒரு வாகனத்தில் வந்தார்கள். அவர்களிடம் நான் பார்த்து மெதுவாக செல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு மதுபோதையில் இருந்த அவர்கள் புண்டை மகனே போன்ற கீழ்நோக்கிய வார்த்தைகளால் என்னை திட்டினார். நான் அவர்களிடம் ஏன் கீழ்நோக்கிய வார்த்தைகளால் பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு இருசக்கர வாகனத்தை அவர்கள் நிறுத்திவிட்டு என்னுடைய இருசக்கர வாகனத்தை தள்ளிவிட்டு ஆளுக்கொரு கல்லை எடுத்து கொண்டு கழுத்தில் என்னை தாக்கினார்கள். அதில் எனக்கு தலையிலும் கன்னத்திலும் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த முருகேசன் மற்றும் தாமஸ் ஆகியோர் வந்து சண்டையை விலக்கி வைத்தார்கள். மேற்படி சம்பவத்தில் எனக்கு இடது பக்க தலை, நெற்றி, வலது கை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டது. பின்னர் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நடந்த விபரங்களை சொல்லி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் வாக்குமூலம் அளித்தேன். **புகார் வாக்குமூலம் அசாஆ 1**. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.27 ..:38:05 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.14/2023 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிரியங்கா | க-பெ | சந்திர சேகர் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 27/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.07.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்படவில்லை**

-----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 18.12.2022 அன்று மதியம் 2.45 மணியளவில் இருசக்கர வாகனத்தில் கழனிவாசலில் இருந்து அரசு மருத்துவமனைக்கு எனது தந்தை சென்று கொண்டிருந்தார். அப்போது இருசக்கர வாகனத்தில் சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் இரண்டு நபர்கள் ஒரு வாகனத்தில் வந்தார்கள். அவர்களிடம் எனது அப்பா பார்த்து மெதுவாக செல்லுங்கள் என்று சொன்னார். அதற்கு மதுபோதையில் இருந்த அவர்கள் புண்டை மகனே போன்ற கீழ்நோக்கிய வார்த்தைகளால் அவரை திட்டினார்கள். அவர் அவர்களிடம் ஏன் கீழ்நோக்கிய வார்த்தைகளால் பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு இருசக்கர வாகனத்தை அவர்கள் நிறுத்திவிட்டு அவருடைய இருசக்கர வாகனத்தை தள்ளிவிட்டு ஆளுக்கொரு கல்லை எடுத்து கொண்டு கழுத்தில் அவரை தாக்கினார்கள். அதில் அவருக்கு தலையிலும் கன்னத்திலும் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த முருகேசன் மற்றும் தாமஸ் ஆகியோர் வந்து சண்டையை விலக்கி வைத்தார்கள். மேற்படி சம்பவத்தில் அவருக்கு இடது பக்க தலை, நெற்றி, வலது கை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டது. பின்னர் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். எனது தகப்பனார் சிகிச்சையில் இருந்தபோது நடந்த விபரங்களை சொல்லி புகார் வாக்குமூலம் அளித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 2**.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.27 16:38:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.